بسم الله الرّحمن الرّحيم

# அல்லாஹ் தடுத்ததை விட்டும் பொறுமை காப்பது

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும்

(அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

நமது உள்ளங்களை அல்லாஹ்வின் அச்சத்தைக் கொண்டு மென்மையாக்குவதற்காக, நமது கல்பில் அல்லாஹ்வின் பயத்தை ஊட்டுவதற்காக, மறுமையைப் பற்றிய சிந்தனையை அதிகப்படுத்துவதற்காக சில விசேஷமான அறிவுரைகளை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் கூறியிருக்கிறார்கள். அந்த ஹதீஸ்களை தான் இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பல பாடங்களாக தலைப்பிட்டு நமக்கு விவரிக்கிறார்கள்.

அதில் நாம் முக்கியமான இரண்டு பாடங்களை பார்க்க இருக்கிறோம். ஒன்று, சபுர் - பொறுமை. இரண்டாவதாக, அமல்களை செய்வதில் நடுநிலையை பின்பற்றுவது, நிதானத்தோடு அமல் செய்வது, ஒரு அமலை தொடர்ந்து செய்வது.

முதலாவதாக பொறுமை என்ற அந்தப் பாடத்தைப் பார்ப்போம். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொறுமைக்கு சிறந்த உதாரணம் ஆவார்கள். அவர்களை விட ஒரு சிறந்த பொறுமையாளர் யாரையும் நாம் காண முடியாது. அல்லாஹ் சுபஹானஹு வதஆலா அத்தகைய பொறுமையாளராகிய நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு முந்திய நபிமார்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்கூறி பொறுமையாக இருக்கும்படி கட்டளையிடுகிறான்.

فَاصْبِرْ كَمَا صَبَرَ أُولُو الْعَزْمِ مِنَ الرُّسُلِ

நபியே! உங்களுக்கு முன்னால் வந்த வீரமிக்க உறுதிமிக்க அந்த இறைதூதர்கள் எப்படி பொறுமையாக இருந்தார்களோ நீங்களும் அப்படியே பொறுமையாக இருங்கள். (அல்குர்ஆன் 46 : 35)

وَاصْبِرْ وَمَا صَبْرُكَ إِلَّا بِاللَّهِ

நபியே! பொறுமையாக இருங்கள். உங்களது பொறுமை அல்லாஹ்விற்காக இருக்கட்டும். (அல்குர்ஆன் 16 : 127)

இப்படியாக அல்குர்ஆனை வாசித்துப் பார்க்கும்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பொறுமையை ஒரு கட்டளையாக, ஒரு உபதேசமாக அல்லாஹ் கூறியுள்ளான்.

பொறுமையைப் பற்றிப் பேசும்பொழுது மார்க்க அறிஞர்கள் மூன்று வகையான பொறுமையை குறிப்பிடுகின்றார்கள். நம்மைப் பொறுத்தவரை பொறுமை என்பது மவுத் வீட்டில் மட்டும் சொல்லக்கூடிய ஒரு வார்த்தையாக இருக்கும். யாராவது ஒருவர் இறந்து விட்டால் அங்கு சென்று பொறுமையாக இருங்கள்; சகித்துக் கொள்ளுங்கள்; இப்படித்தான் பொறுமையை சுருக்கமான அர்த்தம் கொண்டதாக, ஒரு குறுகிய வட்டத்திற்குள் நாம் பார்க்கின்றோம்.

ஆனால், அல்குர்ஆனும் ஹதீஸும் சொல்லக்கூடிய பொறுமை என்பது மிக விசாலமான ஒன்று. மூன்று வகையான பொறுமை இந்த உலகத்தில் நமக்குத் தேவை. நமது வாழ்க்கையில் எந்த ஒரு கட்டமாக இருந்தாலும் சரி, இந்த மூன்று வகையான பொறுமையில் ஒன்று அங்கு நமக்கு கண்டிப்பாக தேவை.

அல்லாஹ் தடுத்த பாவங்களை விட்டு பொறுமையாக இருப்பது; அல்லாஹ் தடுத்த ஹராமான செயல்களை விட்டு பொறுமையாக இருப்பது. அந்தப் பாவங்களை விட்டு விலகி நாம் நம்மை உறுதியாக கட்டுப்பாட்டுடன் நம் நஃப்ஸை கட்டுக்குள் வைப்பது. அதில் பொறுமையாக இருப்பது.

எப்பொழுதுமே பாவம் என்பது அலங்கரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கும். பெரும்பாலும் பாவங்களில் நஃப்ஸுக்கு சில இன்பங்கள் இருக்கும். அப்பொழுது தான் மனிதனை ஷைத்தான் அந்த பாவங்களைக் கொண்டு வழிகெடுக்க முடியும். பாவங்கள் கசப்பான ஒன்றாக இருந்தால் நம்மில் யாருமே அதை செய்யவே மாட்டார்கள். கசப்பானது, கஷ்டமானது யாருக்குமே பிடிக்காது. இயற்கையாகவே அதை விட்டு விலகி இருப்பார்கள். ஆனால், இதுவும் அல்லாஹ்வுடைய ஒரு சோதனை.

நஃப்ஸுக்கு பாவத்தை குறித்து ஒருவிதமான இன்பம், ஒருவிதமான சுகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவேதான், அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய ஹதீஸில் சொன்னார்கள்;

عَنْ أَبِي هُرَيْرَةَ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «حُجِبَتِ النَّارُ بِالشَّهَوَاتِ، وَحُجِبَتِ الجَنَّةُ بِالْمَكَارِهِ» (صحيح البخاري - 6487)

நரகம் மன இச்சைகளை கொண்டு தடுக்கப்பட்டுள்ளது; மன இச்சைகளை கொண்டு சூழப்பட்டுள்ளது. மனதிற்கு விருப்பமற்ற செயல்களை கொண்டு அல்லது மனதிற்கு சுமையான செயல்களைக் கொண்டு சொர்க்கம் சூழப்பட்டுள்ளது.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 6487.

வணக்க வழிபாடுகளை செய்வது சிரமமாக இருக்கலாம். ஐந்து நேர தொழுகைகளை தொழ வேண்டும். தனது செல்வத்தில் இருந்து இரண்டரை சதவீதத்தை ஏழைகளுக்கு தானமாக கொடுக்க வேண்டும். ஒரு கோடி ரூபாயை வைத்திருந்தால் இரண்டரை லட்சத்தை எடுத்து ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். ஹஜ் செய்ய வேண்டும்

இப்படி நூற்றுக்கணக்கான வணக்க வழிபாடுகளை எடுத்துக்கொண்டால் அவற்றில் அல்லாஹ்விற்காக என்ற மனநிலையும், இவையனைத்தும் நாளை மறுமையில் சொர்க்கத்தில் வந்துசேரும் என்ற அந்த யக்கீன், ஈமானிய உணர்வு வருகின்ற வரை அந்த வணக்க வழிபாடு நஃப்ஸிற்க்கு சுமையாக, கஷ்டமாக, சலிப்பாக ஏன் சிலருக்கு வெறுப்பாக கூட இருக்கும்.

நரகத்தை இன்னொருபுறம் பாருங்கள். அசிங்கமான செயல்களை செய்பவர்கள், ஆபாசமான அருவருப்பான காரியங்களில் ஈடுபடுவது, இசை கேட்பது, இன்னும் அது சார்ந்த செயல்கள், பிறருடைய சொத்தை எடுத்துக் கொள்வது பிறருடைய செல்வத்தை அபகரித்துக் கொள்வது, மோசடி செய்வது, ஏமாற்றுவது இவற்றின் மூலமாக நஃப்ஸிற்க்கு ஒரு இன்பம் ஒரு லாபம் ஏற்படுகிறது.

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இதைத்தான் சொன்னார்கள். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

நரகம் ஆசைகளைக் கொண்டு மறைக்கப்பட்டு விட்டது. மனிதன் தனக்கு விருப்பமாக இருக்கிறது என்று அந்த ஆசைகளை செய்வான். எப்பொழுது அதற்குள் செல்கின்றானோ அந்த நரகத்தில் வீழ்ந்து விடுகிறான்.

நஃப்ஸிற்கு பிடிக்காத செயல் நஃப்ஸிற்கு சிரமமாக இருக்கக்கூடிய செயல் தொழுகை நோன்பு போன்ற இபாதத்துக்கள். ஒரு மனிதன் அல்லாஹ்வுக்காக வேண்டி அதை செய்கின்றான் என்றால் அவன் சொர்க்கத்திற்குள் நுழைந்து விடுகின்றான்.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 6487.

பொறுமையின் உடைய முதல் வகை அல்லாஹ் தடுத்த பாவங்களை விட்டு விலகி இருப்பது. பெரும்பாவங்கள், சிறும்பாவங்கள், அல்லாஹ்வுக்கு பிடிக்காத ஒவ்வொரு செயல்களை விட்டும் ஒரு அடியான் விலகி இருப்பது.

இதில் பொறுமை இருக்க வேண்டும். தன்னை பாவம் செய்யாமல் தடுத்து வைத்துக் கொள்வதில் உறுதியாக நிலை குலையாமல் தன் நஃப்ஸை பாதுகாத்து கொள்வதில், தன்னுடைய அமல்களை பாதுகாப்பதில், பாவங்களின் பக்கம் நெருங்காமல் உறுதியாக இருப்பது.

இந்தப் பொறுமை பொறுமையின் வகைகளிலேயே மிக முக்கியமான ஒன்று. எனவேதான் இமாமவர்கள் பொறுமையின் பாடத்திற்கு இந்த வகை பொறுமையை முதலாவதாக சொன்னார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்;

فَإِذَا أَمَرْتُكُمْ بِشَيْءٍ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ، وَإِذَا نَهَيْتُكُمْ عَنْ شَيْءٍ فَدَعُوهُ

நான் உங்களுக்கு ஒரு காரியத்தை ஒரு செயலை செய்யும்படி நான் உங்களை ஏவினால் நீங்கள் உங்களால் முடிந்த அளவு அதை செய்யுங்கள். உங்களால் எவ்வளவு முடியுமோ எந்த அளவு முடியுமோ அதைப் பேண முயற்சியுங்கள். நான் ஒரு விஷயத்தை விட்டு ஒரு காரியத்தை விட்டு உங்களை தடுத்தால் முழுமையாக அதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.(1)

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 1337.

இங்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களால் முடிந்தால், சாத்தியமானால் என்று சொல்லவில்லை. அமல்களை செய்வதில் முடிந்த அளவு போராட வேண்டும். முடிந்த அளவு அமல்களை செய்வதில் உற்சாகத்தோடு முயற்சி எடுத்து செய்ய வேண்டும்.

ஆனால் பாவம் என்று வந்து விடும் பொழுது, தடுக்கப்பட்ட செயல் என்று வந்து விடும் போது என்னால் இவ்வளவுதான் பாவம் செய்யாமல் இருக்க முடியும். அதற்கு மேல் என்னால் இருக்க முடியாது. நான் செய்வேன் என்று சொல்ல முடியாது. அதற்கு இங்கு இடமே கிடையாது. அதற்கு வாய்ப்பே கிடையாது.

பாவம் என்று வந்துவிட்டால் அதை நீ விட்டே ஆக வேண்டும். அதிலிருந்து நீ ஒதுங்கிவிட வேண்டும். அதிலிருந்து தூரமாக வேண்டும். பாவத்திலிருந்து எந்தளவு தூரமாகவேண்டும்?

பாவத்திலிருந்து தூரமாகுவதற்கு ஒரு எல்லையே இல்லை. நாம் பாவத்தை விட்டால்கூட பாவத்திற்கு அருகிலேயே இருக்கின்றோம். பாவத்திற்கு பக்கத்திலேயே இருக்கின்றோம். எனவேதான் இன்று தவ்பா செய்து விட்டு நாளை அதே பாவத்தில் விழுந்து விடுகின்றோம். காலையில் தவ்பா செய்துவிட்டு மாலையில் அதே பாவத்தில் விழுந்து விடுகின்றோம். காரணம் என்ன? பாவத்திலிருந்து தவ்பா செய்தோம். ஆனால் அதை விட்டு தூரமாகவில்லை.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆழமான ஒரு துஆவை பாருங்கள். தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் நபி அவர்கள் போதித்த துஆ;

اللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ، كَمَا بَاعَدْتَ بَيْنَ المَشْرِقِ وَالمَغْرِبِ

யாஅல்லாஹ்! என்னை பாவத்திலிருந்து தூரமாக்கி விடு. என்னை விலக்கி வை. எப்படி கிழக்கு திசைக்கும் மேற்கு திசைக்கும் இடையே நீ விலக்கி வைத்தாயோ இரண்டிற்கும் இடையில் நீ தூரத்தை ஏற்படுத்தினாயோ அப்பேற்பட்ட தூரத்தை எனக்கும் பாவத்திற்கும் இடையே ஏற்படுத்து என்று சொன்னார்கள். (2)

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 744.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு எவ்வளவு பெரிய சஹாபி! உள்ளங்களை கட்டுப்படுத்துவதில் நஃப்சுகளை, மன இச்சைகளை அடக்குவதில்

மனிதர்களுக்கு சக்தி இருக்குமேயானால் அந்த சக்தி மிகப் பெரிய அளவு ஸஹாபாக்களுக்கு இருந்தது என்பதை நாம் யாரும் மறுக்க முடியாது.

நாம் என்ன சொல்கிறோம்? என் நஃப்ஸ் நல்ல நப்ஸ். என் உள்ளம் சரியான உள்ளம். பாவத்திற்கு அருகில் இருக்கிறாயே? பாவத்தை கடந்து செல்கிறாயே? என்றால் என் உள்ளம் சுத்தமான உள்ளம். நான் என்னை கட்டுப் படுத்திக் கொள்வேன். நான் அதில் விழாமல் என்னைப் பாதுகாத்துக் கொள்வேன் என்பதாக நாம் நம் மீது நம்பிக்கை வைக்கின்றோம்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்;

فَلَا تَكِلْنِي إِلَى نَفْسِي طَرْفَةَ عَيْنٍ

என் இறைவா! ஒருகண் சிமிட்டும் நேரம் கூட என்னை என்னளவில் நீ சாட்டி விடாதே! என்று பயந்தார்கள். (3)

அறிவிப்பாளர் : அபூ பக்ரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூ தாவூத், எண் : 5090, தரம் : ஹசன் (அல்பானி)

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு ஈராக்கில் ஒருமுறை ஒரு தெருவின் வழியாக செல்லும் பொழுது, அங்கே சிலர் இசை இசைத்துக் கொண்டிருந்தார்கள். அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு தனது காதை பொத்தியவர்களாக தன்தோழர்களை அழைத்துக் கொண்டு ஓடினார்கள். அங்கிருந்து விரண்டு ஓடினார்கள். சொன்னார்கள்; இசை ஷைத்தானின் சப்தம். இது உள்ளத்திலே நயவஞ்சகத்தை ஏற்படுத்தும். எந்த அளவிற்கு அவர்கள் பயந்து இருக்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பாவத்திலிருந்து விலகியிருப்பதில் நாம் தாமதப்படுத்தக் கூடாது. அதிலே நாம் அலட்சியம் செய்யக்கூடாது. இதைத் தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் துஆவில் சொன்னார்கள்.

எந்த அளவிற்கு மனிதன் பாவத்தில் இருந்து விலகி இருக்கிறானோ அவனது உள்ளத்திற்கு அதைவிட சந்தோஷமான ஒன்று கிடையாது. எந்த அளவிற்கு பாவத்தை நெருங்குகின்றானோ, பாவத்திலே உழன்று கொண்டிருக்கிறானோ அந்த அளவிற்கு அவனுடைய உள்ளம் இருளடைந்து விடும்.

முகத்தின் உடைய மலர்ச்சி அவனுடைய உள்ளத்தின் செழிப்பிலே ஒளியிலே இருக்கிறது. முகத்தின் துக்கம், கவலை அவனது உள்ளத்தில் இருக்கிறது. உள்ளம் பாவத்தில் இருக்கின்றது.

இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இந்த பாடத்தை ஆரம்பிக்கும்போது சொன்னார்கள். அல்லாஹு தஆலா தடுத்த பாவங்கள் (மஹாரிம்) அதில் இருந்து உங்களை அடக்கி இருக்கவேண்டும். அதைவிட்டு விலகி இருக்கவேண்டும்.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஒரு அழகான கருத்தை சொன்னார்கள்; ஓர் அழகான விஷயத்தை சொன்னார்கள்.

அல்லாஹு தஆலா சில விஷயங்களை ஹலாலாக்கி இருக்கின்றான். அது தெளிவானது. சில விஷயங்களை அல்லாஹ் ஹராமாக்கி இருக்கின்றான். அதுவும் தெளிவானது. இந்த இரண்டுக்கும் இடையில் குழப்பமான சந்தேகமான அல்லது பலரால் புரிந்து கொள்ள முடியாத சில காரியங்கள் இருக்கின்றன. யார் தன்னைத்தானே பேணிக் கொள்கிறானோ பாதுகாத்துக் கொள்கின்றானோ அவன் தன்னுடைய தீனை பாதுகாத்துக் கொண்டான். என்று கூறிவிட்டு ஒரு உதாரணம் சொல்கிறார்கள் பாருங்கள்.

ஒவ்வொரு அரசனுக்கும் ஒரு எல்லை இருக்கும். அவனுடைய நாட்டின் எல்லை இருக்கும். அல்லாஹ்வுடைய எல்லை –(ஹிமா) அவன் தடுத்த பாவங்கள். யார் ஒருவன் எல்லைவரை சென்று தன் கால்நடையை மேய்க்கலாம் என்று எண்ணுகின்றானோ அவன் அதைத் தாண்டி விடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

மேலும் சொன்னார்கள்; ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

அல்லாஹு தஆலா எப்பொழுது கடுமையாக கோபப்படுகிறான் என்றால் அவன் தடுத்த அந்த பாவங்கள் சீர்குலைக்கப் படும்பொழுது, அடியார்கள் அதை மீறும் போது அல்லாஹு தஆலா மிகக் கடுமையாக கோபம் அடைகிறான். ஏன்?

குர்ஆனுடைய வசனங்களைப் பாருங்கள்; நூஹ் அலைஹிஸ்ஸலாம் எப்பேறப்பட்ட நபி! அவர்களுக்கும் அல்லாஹ் சொல்ல வைத்தான். இறுதித்தூதர் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அல்லாஹ் சொல்ல வைத்தான்.

قُلْ إِنِّيٓ أَخَافُ إِنْ عَصَيْتُ رَبِّي عَذَابَ يَوْمٍ عَظِيمٍ

இதே வார்த்தையை அல்லாஹு தஆலா நபி நுஹ்ஹையும் சொல்ல வைத்தான். நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாயிலிருந்தும் சொல்ல வைத்தான்.

மக்களே! நான் எனது ரப்புக்கு மாறு செய்தால் மகத்தான நாளின் தண்டனையை பயப்படுகிறேன். (அல்குர்ஆன் 6 : 15, 10 : 15)

இதைத்தான் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் சொன்னார்கள்; நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் சொன்னார்கள். ஏனென்றால் அல்லாஹ்விற்கு மாறு செய்கின்ற பாவம் என்பது அவ்வளவு பயங்கரமான ஒன்றாகும்.

ஒரு முஃமின் தனது நப்ஸை பாவங்களிலிருந்து அடக்கி பொறுமையாக இருப்பது. நப்ஸ் தூண்டும் இழுக்கும் பலவிதமான எண்ணங்களிலே நீ நாளை தவ்பா செய்து கொள்ளலாம்; இன்று விட்டுவிட்டு நாளை செய்து கொள்ளலாம்; ஒருமுறை தானே, இறு முறை தானே ,என்றெல்லாம் பலவாறு நப்ஸ்ஸானதுந நம்மிடம் பேசும். நம்மைத் தீயதில் தள்ளாமல் நப்ஸூம் ஷைத்தானும் நிம்மதி அடைய மாட்டார்கள்.

நபி யூசுப் அலைஹிவஸ்ஸலாம் அவர்கள் எப்பேற்பட்ட நபி!

إِنَّهُ مِنْ عِبَادِنَا الْمُخْلَصِينَ

நாம் தூய்மைப்படுத்திய பரிசுத்தப்படுத்திய அடியார்களில் ஒருவர் என்று சாட்சி சொல்லப்பட்ட நபி. (அல்குர்ஆன் 12 : 24)

அவர்கள் தன்னைப்பற்றி சொன்னார்கள்;

وَمَا أُبَرِّئُ نَفْسِي إِنَّ النَّفْسَ لَأَمَّارَةٌ بِالسُّوءِ إِلَّا مَا رَحِمَ رَبِّي إِنَّ رَبِّي غَفُورٌ رَحِيمٌ

நான் என்னை நானே தூய்மைப்படுத்திக் கொள்ள மாட்டேன். என்னை நானே பீற்றிக் கொள்ள மாட்டேன். நிச்சயமாக நப்ஸு தீயதைத் தான் ஏவும். நிச்சயமாக நப்ஸ் கெட்ட காரியங்களை தான் சொல்லிக் கொடுக்கும். (அல்குர்ஆன் 12 : 53)

இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மிகப்பெரிய விஷயத்தை இங்கே பதிவு செய்கின்றார்கள்.

இந்த உலகத்தில் எல்லோரும் பாவத்தின் பின்னால் ஓடுகிறார்கள். நமது நப்ஸும் பின்னால் அழைக்கின்றது. ஆனால் தடுக்கின்றது. எவ்வளவு கஷ்டம் எவ்வளவு பெரிய போராட்டம் தெரியுமா? ஒரு இரையைப் பார்த்த ஒரு வேட்டைப் பிராணியோ மிருகமோ இரையிலிருந்து அது தடுக்கப்பட்டால் எப்படி அதற்கு நிலைமையோ அது போன்றுதான் இந்த நப்ஸானது பாவத்தை பார்த்துவிட்டு பாவத்திலே இன்பம் கண்டு விட்டு இந்த நப்ஸானது தடுக்கப்படுமேயானால் அப்படி துடிக்கும்.

அந்த நேரத்தில் அந்த நப்ஸை மறுமையை நினைத்து, ஆஹிரத்தை நினைத்து, அல்லாஹ்வுக்கு முன்னால் நிற்கப்படுகின்ற அந்த நேரத்தை நினைத்து நம்முடைய பதிவு நம்முடைய பதிவேட்டில் எழுதப்படுமே என்பதை நினைத்து ஒரு மனிதன் தனது நப்ஸை அடக்குவது இருக்கிறதே ஒரு பெரிய மலையை அகற்றுவதற்காக போராடுவது போன்ற ஒரு பெரிய காரியம். சாதாரணமான விஷயம் அல்ல.

இரண்டு ரக்அத் தொழுது விடலாம். ஒரு நபிலான நோன்பு வைத்து விடலாம். ஒரு பத்து ரூபாயை எடுத்து தர்மம் செய்து விடலாம். ஆனால் பாவம் செய்யாமல் அதிலும் எந்த பாவத்தை நப்ஸ் ருசிகண்டு விட்டதோ எந்த பாவத்தில் நப்ஸ் மூழ்கி இருக்கின்றதோ எந்தப் பாவத்தை நப்ஸ் தேடிக்கொண்டு இருக்கின்றதோ அதிலும் குறிப்பாக எத்தகைய பாவங்களை நாம் செய்யும் போது மக்கள் பார்க்க மாட்டார்கள் மக்கள் பார்க்கவில்லை மக்கள் கண்ணிலே இது படாது என்று மனிதர்கள் செய்கின்றார்களோ அந்த சூழ்நிலையில் அந்த பாவங்களை விட்டு அல்லாஹ்விற்காக மறுமைக்காக ரப்புல் ஆலமீனுக்காக என்று தன்னை தடுத்து வைப்பது இருக்கின்றதே ஒரு பெரிய மலையை சுமப்பது போன்று நப்ஸ்க்கு அவ்வளவு கடினமாக இருக்கும். இருந்தும் ஒரு அடியான் உறுதியாக இருந்துவிட்டால் இதைத்தான் அல்லாஹுத்தஆலா சொல்கின்றான்.

إِنَّمَا يُوَفَّى الصَّابِرُونَ أَجْرَهُمْ بِغَيْرِ حِسَابٍ

இத்தகைய பொறுமையாளர்களுக்கு நாளை கூலி கணக்கில்லாமல் இருக்கும் நாளை மறுமையிலே கணக்கில்லாமல் கொடுக்கப்படும். (அல்குர்ஆன் 39 : 10)

ஏன் சகோதரர்களே! மறுமையில் மட்டுமல்ல துன்யாவிலும் அல்லாஹ் அவர்களுக்கு கொடுப்பான். மறுமையில் கண்டிப்பாக அவர்களுக்கு உண்டு. அதாவது முழுமையாக நிறைவாக யாருடைய கற்பனைக்கும் எட்டாத வகையிலே கொடுக்கிறான். யாருக்கும் தெரியாது. துன்யாவிலும் அல்லாஹுத்தஆலா அதனுடைய ஒரு பகுதியை கொடுக்கின்றான். குறிப்பாக அவனுடைய கஷ்ட நேரத்தில் அல்லாஹ் உதவிக்கு வந்து விடுவான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சொன்னதாக இமாம் அவர்கள் பதிவு செய்கின்றார்கள்.

மூன்று மனிதர்கள் காட்டு வழியாக செல்லும் போது, மழைபெய்ய ஒரு குகையில் ஒதுங்குகிறார்கள். அந்த நேரத்திலே ஒரு பெரிய பாறை கீழே விழுந்து குகையின் வாசலை தடுத்துக்கொண்டது. அந்த நேரத்தில் அந்த மூன்று முஸ்லிம்களும் அல்லாஹ்விடத்தில் துஆ கேட்கின்றார்கள். ஒவ்வொருவரும் தான் அல்லாஹ்விற்காக செய்த செயலைகூறி துஆ கேட்கின்றார்கள்.

அதிலே ஒருவர் கேட்ட துஆவை இந்த நேரத்திலே நினைவு கூர்ந்து பாருங்கள்; இந்தப் பாடத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அதிலே ஒருவர் சொல்கிறார்; என் இறைவா! எனக்கு என்னுடைய தந்தையின் சகோதரர் அவர்களுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் அழகாக இருந்தாள். நான் அவளை ஆசைப்பட்டேன். அவளை அடைவதற்காக பலமுறை முயற்சித்தேன்.

ஆனால், அவளோ எந்த விதத்திலும் வழியை எனக்கு கொடுக்கவில்லை. இப்படி இருக்கின்ற காலத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. என்னிடத்தில் உதவிக்காக வருவதைத் தவிர அவளிடத்தில் வேறு வழி இல்லை. அப்படி வந்த போது அந்த நிர்ப்பந்தத்தை பயன்படுத்தி நான் அவளிடத்திலே கேட்டேன்; எனக்கு உன்னை கொடு என்பதாக.

அவளும் பசி பட்டினி பஞ்சத்தின் நிர்பந்தத்தால் வேறு வழி இன்றி சரி என்று சொன்னாள். என்னிடம் உதவியை வாங்கியதற்கு பிறகு நான் அவளை அனுபவிப்பதற்காக நெருங்கிய பொழுது, அவள் சொன்னாள்; இத்தகில்லாஹ் -அல்லாஹ்வைப் பயந்து கொள்! என்று சொன்னாள். அந்த நேரத்தில் அவளும் என்னை தடுக்கவில்லை தடுக்கக்கூடிய சக்தியும் இல்லை.

ஆனால் அவள் சொன்னாள்; அல்லாஹ்வைப் பயந்து கொள் என்று. ரப்பே உனக்கு நன்றாகத் தெரியும். அந்த நேரத்தில் உன்னுடைய பயத்திற்காகவே நான் அவளை விட்டு விலகினேன்.

ரப்பே இது உண்மையானதாக இருந்தால் இந்தப் பாறையை எங்களுடைய வழியிலிருந்து நீ நகற்றுவாயாக! அகற்றுவாயாக! பாறையும் மூன்றில் ஒரு பகுதி விலகிவிட்டது.

அறிவிப்பாளர் : இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 5974.

பாவங்களை விட்டு விலகி இருக்கும் பொழுது அல்லாஹ்வின் உதவி கிடைக்கும். இதைத்தான் ரப்பு சொல்கின்றான்;

وَمَنْ يَتَّقِ اللَّهَ يَجْعَلْ لَهُ مَخْرَجًا (2) وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

யார் பாவங்களிலிருந்து விலகுகிறார்களோ அவர்களுக்கு அறியாத புறத்திலிருந்து அல்லாஹ் ரிஸ்கை கொடுப்பான். அவர்களது எல்லா கஷ்டங்களுக்கும் உண்டான தீர்வை கொடுப்பான். (அல்குர்ஆன் 65 : 2,3)

ஆகவேதான் அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழக்கமாகவும் இருந்தது. சஹாபாக்கள் உடைய வழக்கமாகவும் இருந்தது. போருக்கு செல்வதற்கு முன்னால் தவ்பா இஸ்திஃபார் செய்வார்கள். தங்களது படையினரை தவ்பா இஸ்திஃபார் செய்ய சொல்வார்கள். ஏன் தெரியுமா? பெரும்பாவங்கள் செய்கின்றவர்கள் இருக்கின்ற பொழுது அல்லாஹ்வின் உதவி தடைப்பட்டுவிடும்.

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றாக இமாமவர்கள் பதிவு செய்கின்றார்கள்.

எங்களது வாழ்க்கையில் சிறந்த பகுதியை நாங்கள் பொறுமையின் மூலமாக பெற்றுக் கொண்டோம். இதற்கு விளக்கம் எழுதக்கூடிய இமாம்கள் எழுதுகின்றார்கள். இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றை வசனத்திற்க்கு பிறகு ஹதீசை பதிவு செய்வதன் நோக்கம் என்ன தெரியுமா? கலீபா உமர் பாரூக் அவர்கள் மூன்று விதமான பொறுமைகளையும் கருத்தில் வைத்து சொன்னார்கள்.

உங்களுக்கு சிறப்பான வாழ்க்கை வேண்டுமா? பாவத்திலிருந்து பொறுமையாக இருப்பது. பொறுமையின் இரண்டாவது வகை, வணக்கவழிபாடுகள் செய்வதில் பொறுமையாக இருப்பது. நின்று தொழுவது நப்ஸிற்கு கஷ்டமாக இருக்கிறது, அனால் நான் நின்று தொழுவேன்.

ஒவ்வொரு வணக்கத்தை செய்யும்பொழுது நப்ஸ் சொல்கிறது; ஏன் இவ்வளவு செய்கின்றாய்? கொஞ்சம் குறைத்துக் கொள்! என்று. இப்படியாக நப்ஸ் நம்மை பின்தள்ளி கொண்டே இருக்கும். சோம்பேறித்தனத்தை கொடுத்துக்கொண்டே இருக்கும். இல்லை நான் இன்னும் செய்வேன் இன்னும் செய்வேன் இன்னும் அதிகப்படுத்துவேன் இன்னும் அதிகப்படுத்துவேன் இப்படியாக போட்டிபோட்டுக்கொண்டு இபாதத்திலே உறுதியாக இருப்பது.

அடுத்து சோதனைகளின் மீது பொறுமையாக இருப்பது. மவுத் வந்துவிட்டாலோ, வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டாலோ அல்லது நோய்நொடிகள் வந்துவிட்டாலோ அல்லது துக்கமான செய்தி கிடைத்தாலும் அந்த நேரத்திலே பொறுமையாக இருப்பது.

இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் அல்லாஹ் விரும்பாததை சொல்லாமல் இருப்பது. இப்படிப் பல முக்கியமான விஷயங்களை இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் பதிவு செய்கின்றார்கள். அதில் நாம் இன்று அறிய வேண்டிய முக்கியமான விஷயம்.

நப்ஸிற்கு பிடிக்கிறது; ஆசைப்படுகிறது; நப்ஸ் பழகிவிட்டது; அல்லாஹ் பாதுகாப்பானாக! நரக நெருப்பை நினைத்து அந்த நப்ஸை அடக்கும் பொழுது அதற்கு அல்லாஹு தஆலா மறுமையிலே சிறந்த கூலி இருக்கின்றது. (அல்குர்ஆன் 39 : 10)

இங்கு நீ ஆசையை அடக்கும் பொழுது மறுமையில் அதை முழுமையாக அனுபவித்துக் கொள்ளலாம்.

وَلَكُمْ فِيهَا مَا تَشْتَهِي أَنْفُسُكُمْ وَلَكُمْ فِيهَا مَا تَدَّعُونَ

ஆசையை அனுபவிக்க முயற்சிக்காதே! சொர்க்கத்தில் நீ ஆசையை தடையில்லாமல் அனுபவிக்கலாம். (அல்குர்ஆன் 41 : 31)

இங்கு உனது ஆசையை ஹலாலோடு அளவோடு சுருக்கிக் கொள்! ஆகிரத்தில் உனக்கு ஹலாலுக்கும் அளவு இருக்காது. உதாரணமாக துணியாவிலே திருமணம் ஹலால். ஆனால் நான்குடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் போக முடியாது. இப்படி எந்த ஒன்றாக இருந்தாலும் சரி அதற்கு ஒரு அளவு இருக்கிறது. ஹலாலாகும் ஒரு அளவு இருக்கின்றது. ஆனால் மறுமை என்று வந்துவிட்டால் எதற்கும் அங்கே தடை இல்லை.

وَفَاكِهَةٍ كَثِيرَةٍ (32) لَا مَقْطُوعَةٍ وَلَا مَمْنُوعَةٍ

ஏராளமான கனிவர்க்கங்களும் உண்டு. அதன் கனிகள் (புசிக்க) தடுக்கப்படாது, (பறிப்பதால்) குறைவுறாது. (அல்குர்ஆன் 56 : 32,33)

إِلَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ فَلَهُمْ أَجْرٌ غَيْرُ مَمْنُونٍ

ஆயினும், எவர்கள் நம்பிக்கைகொண்டு நற்செயல்களைச் செய்து வருகிறார்களோ அவர்களைத் தவிர. (அவர்கள் மேலான தன்மையில் இருப்பதுடன்) அவர்களுக்கு (என்றென்றுமே) தடைபடாத (நற்)கூலியுண்டு. (அல்குர்ஆன் 95 : 6)

தடையில்லாத, நிரந்தரமான இன்பங்களை அல்லாஹு தஆலா சொர்க்கத்தில் தர காத்திருக்கிறான். எப்பொழுது இந்த அற்பமான வாழ்க்கையிலே இந்த நிலையில்லாத வாழ்க்கையில் இந்த சொற்பமான வாழ்க்கையில் ஒரு அற்பமான இன்பத்தை அல்லாஹ்விற்காக விட்டு விலகும் பொழுது நமக்கு மறுமையில் அது கிடைக்கும்.

அல்லாஹு ஸுப்ஹானஹு தஆலா அந்த பொருத்தத்தை மன்னிப்பை அடைவதற்கு உண்டான அருளைத் தருவானாக! தீய காரியங்கள், தீய செயல்கள், தீய எண்ணங்கள், தீய கொள்கைகள், அனைத்தையும் விட்டு விலகி வாழ்வதற்கு மன உறுதியையும் அல்லாஹு ஸுப்ஹானஹு தஆலா நம் அனைவருக்கும் தந்தருள்வானாக!

அல்லாஹ் தடுத்ததை விட்டும் பொறுமை காப்பது

ஆமீன்

أقول قولي هذا أستغفر الله لي ولكم ولسائر المسلمين من كل ذنب فاستغفروه إنه هو الغفور الرحيم

**குறிப்புகள் :**

குறிப்பு 1)

وحَدَّثَنِي زُهَيْرُ بْنُ حَرْبٍ، حَدَّثَنَا يَزِيدُ بْنُ هَارُونَ، أَخْبَرَنَا الرَّبِيعُ بْنُ مُسْلِمٍ الْقُرَشِيُّ، عَنْ مُحَمَّدِ بْنِ زِيَادٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: خَطَبَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَقَالَ: «أَيُّهَا النَّاسُ قَدْ فَرَضَ اللهُ عَلَيْكُمُ الْحَجَّ، فَحُجُّوا»، فَقَالَ رَجُلٌ: أَكُلَّ عَامٍ يَا رَسُولَ اللهِ؟ فَسَكَتَ حَتَّى قَالَهَا ثَلَاثًا، فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: " لَوْ قُلْتُ: نَعَمْ لَوَجَبَتْ، وَلَمَا اسْتَطَعْتُمْ "، ثُمَّ قَالَ: «ذَرُونِي مَا تَرَكْتُكُمْ، فَإِنَّمَا هَلَكَ مَنْ كَانَ قَبْلَكُمْ بِكَثْرَةِ سُؤَالِهِمْ وَاخْتِلَافِهِمْ عَلَى أَنْبِيَائِهِمْ، فَإِذَا أَمَرْتُكُمْ بِشَيْءٍ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ، وَإِذَا نَهَيْتُكُمْ عَنْ شَيْءٍ فَدَعُوهُ« (صحيح مسلم-1337)

குறிப்பு 2)

حَدَّثَنَا مُوسَى بْنُ إِسْمَاعِيلَ، قَالَ: حَدَّثَنَا عَبْدُ الوَاحِدِ بْنُ زِيَادٍ، قَالَ: حَدَّثَنَا عُمَارَةُ بْنُ القَعْقَاعِ، قَالَ: حَدَّثَنَا أَبُو زُرْعَةَ، قَالَ: حَدَّثَنَا أَبُو هُرَيْرَةَ، قَالَ: كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَسْكُتُ بَيْنَ التَّكْبِيرِ وَبَيْنَ القِرَاءَةِ إِسْكَاتَةً - قَالَ أَحْسِبُهُ قَالَ: هُنَيَّةً - فَقُلْتُ: بِأَبِي وَأُمِّي يَا رَسُولَ اللَّهِ، إِسْكَاتُكَ بَيْنَ التَّكْبِيرِ وَالقِرَاءَةِ مَا تَقُولُ؟ قَالَ: " أَقُولُ: اللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ، كَمَا بَاعَدْتَ بَيْنَ المَشْرِقِ وَالمَغْرِبِ، اللَّهُمَّ نَقِّنِي مِنَ الخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ، اللَّهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالبَرَدِ" (صحيح البخاري - 744)

குறிப்பு 3)

حَدَّثَنَا الْعَبَّاسُ بْنُ عَبْدِ الْعَظِيمِ، وَمُحَمَّدُ بْنُ الْمُثَنَّى، قَالَا: حَدَّثَنَا عَبْدُ الْمَلِكِ بْنُ عَمْرٍو، عَنْ عَبْدِ الْجَلِيلِ بْنِ عَطِيَّةَ، عَنْ جَعْفَرِ بْنِ مَيْمُونٍ، قَالَ: حَدَّثَنِي عَبْدُ الرَّحْمَنِ بْنُ أَبِي بَكْرَةَ، أَنَّهُ قَالَ لِأَبِيهِ: يَا أَبَتِ إِنِّي أَسْمَعُكَ تَدْعُو كُلَّ غَدَاةٍ «اللَّهُمَّ عَافِنِي فِي بَدَنِي، اللَّهُمَّ عَافِنِي فِي سَمْعِي، اللَّهُمَّ عَافِنِي فِي بَصَرِي، لَا إِلَهَ إِلَّا أَنْتَ، تُعِيدُهَا ثَلَاثًا، حِينَ تُصْبِحُ، وَثَلَاثًا حِينَ تُمْسِي»، فَقَالَ: إِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَدْعُو بِهِنَّ فَأَنَا أُحِبُّ أَنْ أَسْتَنَّ بِسُنَّتِهِ، قَالَ عَبَّاسٌ فِيهِ: وَتَقُولُ: «اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْكُفْرِ، وَالْفَقْرِ، اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ، لَا إِلَهَ إِلَّا أَنْتَ تُعِيدُهَا ثَلَاثًا حِينَ تُصْبِحُ، وَثَلَاثًا حِينَ تُمْسِي، فَتَدْعُو بِهِنَّ» فَأُحِبُّ أَنْ أَسْتَنَّ بِسُنَّتِهِ قَالَ:

وَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: دَعَوَاتُ الْمَكْرُوبِ «اللَّهُمَّ رَحْمَتَكَ أَرْجُو، فَلَا تَكِلْنِي إِلَى نَفْسِي طَرْفَةَ عَيْنٍ، وَأَصْلِحْ لِي شَأْنِي كُلَّهُ، لَا إِلَهَ إِلَّا أَنْتَ، وَبَعْضُهُمْ يَزِيدُ عَلَى صَاحِبِهِ» (سنن أبي داود- 5090) [حكم الألباني] : حسن الإسناد

DARUL HUDA

211(102), FIRST FLOOR, LINGHI STREET, MANNADY, CHENNAI – 600001.

muftiomar@gmail.com, 044 25247866, 9840174121, 9884469044

Facebook: https://www.facebook.com/muftiomarsheriffqasimi/

Youtube: https://www.youtube.com/channel/UC4CmuDuplV91jmQ2jX32Iwg?view_as=subscriber

Website: http://www.darulhuda.net/